# நோயின், பேயின் பிடியிலிருந்து விடுதலை பெற ஊக்குவிக்கும் வேத வாக்குகள்.

1. நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கை விடுவதும் இல்லை. யோசுவா 1:5

2. நீ பயப்படாதே. நான் உன்னைப் பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன். ஏசாயா 41:10

3. மலைகள் விலகினாலும் குன்றுகள் நிலை பெயர்ந்தாலும் என் அருள் உன்னை விட்டு விலகாது. ஏசாயா 54:10

4. உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காது. ஏசாயா 54:17

5. நான் கர்த்தருடைய கட்டளைகளுக்கு பயந்து நடக்கிறபடியினால் அவிசுவாசிகள் அனுபவித்த எந்த வியாதியும் என்மேல் வர முடியாது. யாத்.15:26

6. எனக்காக சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசுவை நோக்கிப் பார்த்து சுகமடைகிறேன். யோவான் 3:14,15

7. நான் எல்லாரையும் மன்னித்து விட்டேன். மத்.6:12
நான் எல்லாரிடத்திலேயும் மன்னிப்பைப் பெற்று விட்டேன். மத்.5:23,24

8. ஆண்டவர் வியாதியை என்னிலிருந்து விலக்குவார். யாத்.23:25

9. உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, காயங்களை ஆற்றுவேன். எரே.30:17.

10. கர்த்தர் தமது வசனத்தை அனுப்பி என்னை குணமாக்கி, என்னை அழிவுக்கு தப்புவிப்பார். சங்.107:20

11. நான், கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பேன். உபாகமம் 8:3,4

12. இயேசுவே எனக்கு ஜீவனும், தீர்க்காயுசுமானவர். உபாகமம் 30:19,20

13. உன் விண்ணப்பத்தைக் கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன். இதோ நான் உன்னைக் குணமாக்குவேன். 2 இராஜாக்கள் 20:5,7

14. அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து அவனை கனப்படுத்துவேன். சங்கீதம் 91:15

15. அவன் உடல் வாலிபத்தில் இருந்ததைப் பார்க்கிலும் ஆரோக்கியமடையும். தன் வாலவயது நாட்களுக்கு திரும்புவான். யோபு 33:25

16. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் உயிரை அழிவுக்கு விலக்கிமீட்பார். சங்கீதம் 103:3

17. நீங்கள் சுகமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். யாக்கோபு 5:16

18. நான் சாவாமல் பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன். சங்கீதம் 118:17

19. இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார். அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார். சங்கீதம் 147:3

20. மீட்பர் இயேசு என்னை விடுதலையாக்குவார், மெய்யாகவே நான் விடுதலையடைகிறேன். 2 கொரி.3:17

21. கர்த்தரின் நாமம் பலத்த துருகம். நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான். நீதிமொழிகள் 18:10

22. மெய்யாகவே இயேசு நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார். நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய காயங்களால் குணமானோம்.
ஏசாயா 53:4-5

23. என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும். மல்கியா 4:2

24. நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை வேண்டுகிற மனிதன் யார்? உன் நாவை பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள். சங்கீதம் 34:12,13

25. இயேசு எங்கும் சுற்றி நடந்து ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி சுகமாக்கினார். மத்தேயு 4:23

26. பலவித வியாதிகளையும், வேதனைகளையும், அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்களைச் சுகமாக்கினார். மத்தேயு 4:24-25

27. இயேசு அசுத்த ஆவிகளை தமது வார்த்தையினாலே துரத்தி பிணியாளிகளெல்லாரையும் சுகமாக்கினார். மத்தேயு 8:16,17

28. இயேசு ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி, அவர்களை சுகமாக்கினார். மத்தேயு 9:35

29. உன்னதமான கர்த்தரையே அடைக்கலமாக வைத்திருக்கும் எனக்கு எந்தப் பொல்லாப்பும் நேரிடாது, எந்த வாதையும் என் வீட்டை அணுகமுடியாது. சங்.91:10

30. நான் கர்த்தரை விசுவாசிக்கிறபடியால் தேவனுடைய மகிமையைக் காண்பேன். யோவான் 11:40

31. ஆரோக்கியமான பேச்சு உயிர் தரும் மரம். நீதிமொழிகள் 15:4

32. சத்தியத்தை நான் அறிவேன், சத்தியம் என்னை விடுதலை செய்யும். யோவான் 8:32

33. பரிகாரியாகிய கர்த்தர் என் வியாதிகளை நீக்கி என்னை சுகமாக்குவார். யாத் 15:26

34. நான் சுகமடைவதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. மாற்.1:41

35. இயேசு எனக்காக சாபமாகி என் சாபத்திற்கு என்னை நீங்கலாக்கி மீட்டிருக்கிறார் பரம்பரை வியாதிகள், சாபமான வியாதிகள் என் குடும்பத்தில் கிரியை செய்ய முடியாது. கலா.3:13

36. என் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும். ஏசா.58:8

37. இல்லாதவைகளை இருப்பதைப் போல் அழைக்கும் தேவன் என் உடலில் இல்லாத சுகத்தைக் கொடுப்பார். ரோமர் 4:17

38. ஆவியினாலே கர்த்தர் என் கட்டுகளையும், பில்லிசூனிய வல்லமைகளையும், மந்திரவாதங்களையும் சுட்டெரித்துப் போடுகிறார்.

39. கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவன் என்னில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான என் சரீரத்தையும் உயிர்ப்பிப்பார். ரோமர் 8:11

40. இயேசுவால் செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்றும் இல்லை. எரே.32:17

41. ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் எனக்குச் செய்வார் யோபு 5:9

42. மனிதரால் (மருத்துவரால்) செய்ய முடியாததை என் தேவனால் செய்ய முடியும். லூக்.18:27

43. இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தரை சுகமாக்கினார். மத்தேயு 14:14

44. பிணியாளிகள் எல்லாரையும் அவரிடத்தில் கொண்டு வந்து அவருடைய உடுப்பின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொட அவரை வேண்டிக்கொண்டார்கள். தொட்ட யாவரும் சுகமானார்கள். மத்தேயு 14:35

45. இயேசு, ‘உன் விசுவாசம் பெரிது. நீ விரும்புகிறபடியே உனக்கு ஆகக்கடவது’ என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள். மத்தேயு 15:26,28

46. ஊமையர் பேசுகிறதையும், ஊனர்கள் சுகமாகிறதையும், சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும் ஜனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத்தினார்கள். மத்தேயு 15:30

47. இயேசு மனதுருகி, குருடரின் கண்களைத் தொட்டார். உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின்சென்றார்கள். மத்தேயு 20:29-34

48. இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு, எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு என்றார். சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று. மாற்கு 1:41,42

49. மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். உடனே, திமிர்வாத நோயாளி எழுந்து, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு போனான். மாற்கு 2:3,5,11,12

50. ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்கு பின்னாக வந்து அவருடைய சால்வையை தொட்டாள். அவளுடைய ரத்தப் போக்கு நின்றது. மாற்கு 5:28-30

51. அப்பொழுது அவர், வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறென் என்றார். செத்தவன் பாடையில் இருந்து எழுந்தான். லூக்கா 7:13,14

52. பிள்ளையே எழுந்திரு என்றார். அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது. லூக்கா 8:41,54,55

53. பிசாசு திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறான். இயேசு அவர்களுக்கு ஜீவன் உண்டாயிருக்கிவும். அது பரிபூரணப்படவும் வந்தார். யோவான் 10:10

54. என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். யோவான் 16:16

55. கிறிஸ்து இயேசுவினாலே ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்று. ரோமர் 8:2

56. கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார். ரோமர் 8:11

57. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். 1 கொரிந்தியர் 3:16,17

58. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். எபிரேயர் 10:38

59. பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். 1 யோவான் 3:8

60. நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்கு கொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். 1 யோவான் 5:14

61. இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள். வெளிப்படுத்தல் 12:11

62. கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன். நெகேமியா 8:10

63. என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன். என்னை நீர் குணமாக்கினீர். சங்கீதம் 30:2

64. படுக்கையின் மேல் வியாதியாய் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார். வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவார். சங்கீதம் 41:1-3

65. உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது கர்த்தர் அவனை எழுப்புவார். யாக்கோபு 5:14,15

66. அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார். வாதை உன் வீட்டை அணுகாது. சங்கீதம் 91:3,10

67. அவர்கள் முதிர் வயதிலும் கனி தந்து, புஷ்டியும், பசுமையுமாயிருப்பார்கள். சங்கீதம் 92:12-15

68. கர்த்தர் என்னை பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பார். என்னை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பார். ஓசியா 13:14

69. என் மகனே கேள், என் வார்த்தைகளை ஏற்றுக்கொள். அப்பொழுது உன் ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும். நீதிமொழிகள் 4:10

70. சுத்தமனம் உடலுக்கு ஜீவன். நீதிமொழிகள் 14:30

71. என்னைக் கர்த்தர் தாங்குவார், என்னுடைய வியாதியிலே என் படுக்கை முழுவதையும் மாற்றிப் போடுவார். சங்.41:3

72. மனமகிழ்ச்சி நல்ல மருந்து. நீதிமொழிகள் 17:22

73. முப்பத்தெட்டு வருடமாய் வியாதியாய் இருந்த மனுஷனை சுகமாக்கின இயேசு என் வியாதியையும் சுகமாக்குவார், நான் சுகமாவேன் யோவான் 5:8

74. மரணமும் ஜீவனும் நமது நாவின் அதிகாரத்திலிருக்கும். அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியை புசிப்பார்கள். நீதிமொழிகள் 18:21

75. பழையவைகள் யாவும் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின. 2 கொரி.5:17

76. இனி ஒரு சாபமும் என் வாழ்க்கையில் இல்லை. வெளி.22:3

77. கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள் புதுபெலன் அடைந்து, எழும்புவார்கள். ஏசாயா 40:31

78. சாத்தான் சுகத்தை திருட வருகிறான், ஆனால் இயேசுவோ எனக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தார். யோவான் 10:10

79. சாத்தானின் சகல வல்லமைகளை மேற்கொள்ளவும் என் இயேசு எனக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். லூக்.10:19

80. சாத்தானால் வியாதிப்பட்ட யோபுவை சுகமாக்கிய கர்த்தர் என்னையும் சுகமாக்குவார். யோபு 42:10,12

81. பலத்தினாலும், சாமர்த்தியத்தினாலும் முடியாதது கர்த்தருடைய ஆவியினாலே முடியும். சகரி.4:6

82. விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன . . . . . . . வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சுகமாவார்கள். மாற்கு 16:17,18

83. தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை. லூக்கா 1:37

84. இயேசு தம்முடைய சீஷரை வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார். லூக்கா 9:1,2

85. என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற அற்புதங்களைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய அற்புதங்களையும் செய்வான். யோவான் 14:12,13

86. தேவன் வாக்குத்தத்தம் பண்ணியதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, பிள்ளை பெற்றான். ரோமர் 4:19

87. அப்போஸ்தலர்களுடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. அப்போஸ்தலர் 5:12

88. அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகத் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அப்போஸ்தலர் 8:7,8

89. இயேசு நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார். அப்.10:38

90. பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களை செய்தருளினார். வியாதியஸ்தர் வியாதிகள் நீங்கிப்போயின. பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன. அப்போஸ்தலர் 19:11

91. இயேசுவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி, வலதுகையினால் சப்பாணியை பிடித்துத் தூக்கிவிட்டான். அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான். அப்போஸ்தலர் 3:6,7

92. கர்த்தருடைய ஆவியானவர் இயேசுவின்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலைக் கூறவும் கர்த்தர் அவரை அபிஷேகம் பண்ணியிருக்கிறார். ஏசா.61:1

93. கர்த்தர் அவருடைய ஊழியக்காரனாகிய நான் சுகமாயிருப்பதையே விரும்புகிறார். சங்.35:27

94. ஞானமுள்ளவர்களுடைய சொல் மருந்து. நீதிமொழிகள் 12:18

95. அவர்கள் வழிகளை நான் பார்த்து, அவர்களை குணமாக்குவேன். ஏசாயா 57:18,19

96. விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும். ஏசாயா 58:6-8

97. நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏரேமியா 30:17

98. இதோ நான் அவர்களுக்கு சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்கு பரிபூரண சமாதானத்தையும், சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன். எரேமியா 33:6

99. மனுஷன் உணவினாலே மட்டும் அல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். மத்தேயு 4:4

100. ஆகையால் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? மத்தேயு 7:11

101. வியாதியுள்ளவர்களை சுகமாக்குங்கள். மரித்தோரை எழுப்புங்கள். பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய் பெற்றீர்கள். இலவசமாய் கொடுங்கள். மத்தேயு 10:8

102. பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் இயேசுவினிடத்தில் கொண்டுவரப்பட்டான். குருடும் ஊமையுமானவன் பேசவும் காணவும் தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார். மத்தேயு 12:22

103. லாசருவே, வெளியே வா என்று, இயேசு உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். யோவான் 11:41

104. கர்த்தருடைய நாமத்திற்கு பயந்திருக்கிற என்மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அவர் செட்டைகளின்கீழ் ஆராக்கியம் இருக்கும். மல்.4:2

105. விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் என்னை எழுப்புவார். யாக்.5:15

106. கர்த்தருடைய வசனங்கள் எனக்கு ஜீவனும் என் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமாகவும் இருக்கிறது. நீதி.4:20,22

107. இயேசு இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகாதயையும், சத்தியமுள்ள தேவன் (யாத். 34:6). அவர் என்னைக் கைவிடமாட்டார்.

108. தேவன் எனக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியை கொடுத்திருக்கிறார். 2 தீமோ.1:7

109. கிறிஸ்து எனக்காக பலியாகி பாவம், சாபம், வியாதி இவைகளிலிருந்து என்னை மீட்டிருக்கிறார். யோவான் 8:36

110. பேதுருவின் மூலம் ஜனங்களை சுகமாக்கினார். அப்.5:15

111. பவுலின் மூலம் வியாதியஸ்தர்களை சுகமாக்கினார் அப்.19:12

112. பிலிப்புவின் மூலம் அசுத்த ஆவிகளை விரட்டி திமிர்வாதக்காரரையும், சப்பாணிகளையும் குணமாக்கினார் அப்.8:7

113. நீங்கள் உங்கள் உடலைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று வேண்டுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. ரோமர் 12:1

114. உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும், தாயையும் கனம்பண்ணு. எபேசியர் 6:2,3

## இப்புத்தகம் வேண்டுமெனில் தொடர்புக்கு

S. THAYAPPAN, No. 24, Sakthi Ayyanar Nagar,
Thiruvancheri, Agaram Main Road, Chennai 600126.
Ph :04422234526, 8680859894

## HELPFUL BOOKS - உதவியான புத்தகங்கள்

1. கிறிஸ்துவுக்குள் உன்னைப் பார் - எசேக்கியா பிரான்சிஸ
2. சாபங்களை உடைப்பது எப்படி - பெனித்தா பிரான்சிஸ்
3. வல்லமையான விசுவாச அறிக்கைகள் 1000 - சாம் ஜெபத்துரை
4. வாக்குத்தத்தங்கள் 1000 - சாம் ஜெபத்துரை
5. நான் சுகமானேன் - 200 அறிக்கைகள் - ஜாய்ஸ் சாமுவேல்
6. வெற்றிக்கு வழி வாயே - 365 அறிக்கைகள் - ஜேசுதாஸ் சாமுவேல்
7. Divine Healing - Joe Durai - wwwantiochhouse.org
8. God’s promises - A.L.Gill - Word Publishing
9. Faith to live by - Derick Prince
10. நம்பிக்கையின் வார்த்தை - அருள் ராஜ்
12. ஸ்தோத்திர பலிகள் 1000 – Wycliff David
13. என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் - தாயப்பன்

## ACKNOWLEDGEMENT

எனக்காக ஜெபித்து, ஆலோசனை அளித்து, சரிப்படுத்தி விசுவாசப் பாதையில் என்னை ஊக்குவித்த சகோதரர்கள் பேட்ரிக் ஜோஷ்வா, எசேக்கியா பிரான்சிஸ், ஜெயசீலன், ஜேசுதாஸ், நெகேமியா, ஜோ துரை, சாம் ஜெபத்துரை, அருள்ராஜ் மற்ற அனைத்து தேவ ஊழியருக்கும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். இப்புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்த சகோதரி.ரெஜினா, பதிப்பித்த சகோ.தாயப்பன் இதனைப் புத்தக வடிவில் கொண்டு வந்த ஷீபா, ரத்னா, அனு, சாம், ஆந்திரு ஆகியோருக்கு என் நன்றி.